ஊடக அறிவித்தல் இல. - 40

# தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

## அனைத்து வாகனங்களிலும் முச்சக்கர வண்டிகளிலும் ஒட்டப்பட்டுள்ள கட்சிகளை/ குழுக்களை/ வேட்பாளர்களை ஊக்கப்படுத்தும் ஸ்ரிக்கர்களையும் புகைப்படங்களையும் சித்திரங்களையும் அகற்றுதல்

பாராளுமன்றத் தேர்தல் பிரகடனம் செய்யப்பட்டுள்ளமையால் தேர்தல் சட்டவிதிகளுடன் அமைந்தொழுகாத விதத்தில் தனியார பேருந்து வண்டிகள், முச்சககர வண்டிகள் உட்பட தனியார் வாகனங்களில் ஒவ்வொரு வேட்பாளரை/கட்சியை ஊக்கப்படுத்தும் விதத்திலான வாசகங்கள், அடையாளங்கள, புகைப்படங்கள் அடங்கிய ஸ்ரிக்கர்களையும் பதாகைகளையும் வெளிக்காட்டி வைத்தல் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

போட்டியிடுகின்ற வேட்பாளர் பயணஞ்செய்யும் பிரத்தியேக வாகனம் தவிர்ந்த வேறு வாகனங்களில் மேற்குறிப்பிடப்பட்டவாறான வெளிக்காட்டி வைத்தல்கள், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 74 ஆம் பிரிவின் கீழ் தவறொன்றுக்கான குற்றமாக அமைவதால், தனியார் பேருந்து வண்டிகளிலும் முச்சக்கர வண்டிகளிலும் ஏனைய தனியார் வாகனங்களிலும் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டிருப்பின் உடனடியாக அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தனியார் பேருந்து வண்டிகள், முச்சக்கர வண்டிகள் உட்பட அனைத்து தனியார் வாகனங்களிலும் ஒட்டப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட வகையிலான ஸ்ரிக்கர்களை கழற்றி அகற்றுவதற்கு ஒவ்வொரு பொலிஸ் அதிகாரப் பிரதேசத்தையும் உள்ளடக்கும் விதத்தில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அந்தந்த பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கும், பிரிவுகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளுககும், அதன மூலம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அவசியமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
தேர்தல் ஆணைக்குழு சார்பாக

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.07.08